





# மரம் நடுவோம்... மனம் மகிழ்வோம்!

காடுகளை அழிக்காதீர்கள், மரங்களை வெட்டாதீர்கள்!' என்று சும்மா சொல்லிக் கொண்டிருக்காமல் மரங்களை நட்டு கின்னஸ் சாதனை புரிந்து இருக்கிறார்கள் ஈஷா யோகா நிறுவனத்தினர்.

'ஏழு லட்சம் மரங்கள் நடும் விழா' என்ற இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் சுமார் 'எட்டரை லட்சம் மரங்கள் நட்ட விழா'வாக மாறியதால் ஈஷா நிறுவனத்தினர் மிக சந்தோஷமாக இருக்கிறார்கள்.

முதல்வர் வீட்டில் முதல் செடி நட்டு ஆரம்பிக்கப்பட்ட பசுமை ரிலே, இரண்டு நாட்கள் தமிழ்நாட்டின் ஏழு மாவட்டங்களில் தொடர்ந்து, கவர்னர் வீட்டில் முடித்து வைக்கப்பட்டது.

இந்த விழாவின் ஒரு பகுதியாக தாம்பரம் சீயோன் மெட்ரிக் பள்ளியிலும் ஒரு பக்கத்தை பசுமையாக்க வந்திருந்தார் ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

அனைவருக்கும் மரக் கன்றுகளை வழங்கிய ஜக்கி, அவர்களுடன் தானும் மரக்கன்றுகளை நட்டார்.

பள்ளியில் நடந்த விழாவில் ஈஷாவின் 'பசுமைக்கரங்கள்' பற்றிப் பேசிய ஜக்கி "காடுகள் 33% இருந்தால் மட்டும்தான் சுற்றுச்சூழல் வளம் பாதுக்காக்கப்படும். அப்படி இல்லாத நாடுகள் அடுத்த 25 வருடங்களுக்குள் பாலைவனம் ஆகிவிடும்.



இதை நான் சொல்லவில்லை. உலக நாடுகளுக்கு ஐ.நா சபை கொடுத்த எச்சரிக்கை இது.

பெரியவர்களுக்கு இதெல்லாம் செய்ய அதிக நேரம் இருக்காது. அதனால் வருங்கால மன்னர்களான நீங்கள்தான் பூமியைப் பார்த்துக்கொள்ளவேண்டும். உங்களுக்கு முன்னால் வந்தவர்கள் செய்த தப்பினால்தான் பூமி இந்த மாதிரி மாறியிருக்கு. அதை உங்கள் முயற்சியால் பசுமையாக்குங்கள். அடுத்த தலைமுறை உங்களைப் பாராட்டுவது உங்கள் கையில்தான் இருக்கு" என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்தத் திருவிழாவுக்காக சுமார் ஒரு வருடம், இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாரின் துணையுடன், தமிழகமெங்கும் விதைகளைச் சேகரித்தார்களாம். மலைப்பிரதேசங்களிலும், சாலையோரத் தோப்புகளிலும், குப்பைகளிலும்கூட சேகரிக்கப்பட்ட விதைகள் 103 நாற்றுப் பண்ணைகளில் வளர்க்கப் பட்டுள்ளன.

ஈஷாவின் அடுத்த இலக்கு, 2007-ல் இரண்டரைக் கோடி மரங்கள்.

சரி, அதில் உங்கள் பங்களிப்பு என்ன?

கார்த்திகா குமாரி